# கொழும்புப் பல்கலைக் கழகம், இலங்கை
## சட்ட பீடம்
## சட்டமாணிப் பரீட்சை - ஆண்டு IV, 2018

**புலமைச் சொத்துச் சட்டம்** (Intellectual Property Law)
(மூன்று மணித்தியாலம்)
வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப் படும்)

---

1. இலங்கையிலுள்ள புத்தக வெளியீட்டுக் கம்பனியொன்றான ஹிமாலி பப்ளிகேஷன்ஸ் என்பது பிரசித்தி பெற்ற திரு. பின்டோ என அழைக்கப்பட்டவரான ஆளுமை அபிவிருத்தி ஆலோசகரொருவரால் எழுதப்பட்டதான "Thoughts for inculcating soft skills in Students Life" எனும் தலைப்புடனான புத்தகமொன்றை வெளியிடுகின்றது. மென்மைத் திறமைகளின் (soft skills) வித்தியாசமான அம்சங்களை விளக்கும் போது நூலாசிரியரின் சொந்த அனுபவங்களையும் கள ஆய்வுகளையும் (case studies) புத்தகம் பாவித்திருந்தது. உலகளாவுய ரீதியில் மதிப்புப் பெற்ற கல்வியியலாளரான கலாநிதி தோமஸ் என்பவரால் அவரது புத்தகமான "Soft Skills for Life" எனும் தலைப்புடைய புத்தகத்தில் கூறப்பட்டதான முறைமைகள் மற்றும் கள ஆய்வுகளினால் நூலாசிரியர் பெரிதும் ஈர்க்கப்பட்டதாக புத்தகத்தின் முன்னுரையானது கூறியது. திரு. பின்டோவின் புத்தகமானது சாதாரண தர மாணவர்களுக்கு மேலதிகமான வாசிப்புப் புத்தகம் ஒன்றாகக் கல்வித் திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.

   வேதுஜா பப்ளிஷேஸ் என்பதனால் வெளியிடப் பட்டதான இன்னுமோர் புத்தகமான "Soft Skills for a Perfect Life" எனும் தலைப்புடைய புத்தகமும் சந்தையில் காணப்பட்டதுடன் அது உயர் விற்பனையுடையதாகவும் கணிசமானளவு புழக்கத்தை உடையதாகவும் காணப்பட்டது. இப்புத்தகமானது "Soft Skills for Life" இன் வினியோகத்தரால் வழங்கப்பட்ட மதிப்பிற்குப் பதில் வழங்கும் முகமாக அப்புத்தகத்தை சிங்கள மொழியில் மொழிபெயர்ப்பதற்கு அனுமதித்தனர்.

எனினும், வேதுஜா பப்ளிஷேஸினால் வெளியிடப்பட்டு சந்தையில் மிகக் குறைந்த விலையில் விற்கப் படுவதான புத்தகம் ஹிமாலி பப்ளிகேஷன்சஸின் புத்தகத்தின் மீள் தயாரிப்பு (reproduction) எனவும் ஹிமாலி பப்ளிகேஷன்ஸ் உறுதியாகக் கூறுகின்றது. மேலும் வேதுஜா பப்ளிஷேஸினால் வெளியிடப்பட்ட புத்தகம் சிறியளவிலான மாறுபாடுகளை மட்டுமே கொண்டிருக்கின்றதெனவும் அம்மாறுபாடுகள் கூட திரிபு படுத்தப் பட்டனவாக அமைவதால் திரு. பின்டோவின் புகழ் பாதிக்கப்படுவதாகவும் அது வாதாடுகின்றது.

இச் சந்தர்ப்பத்தில் எழுகின்றதான ஆக்கவுரிமை சம்பந்தமான விடயங்களை அடையாளம் காண்பதுடன் பொருத்தமான நியதிச்சட்ட வாசகங்கள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக் கொண்டு அவற்றை ஆராய்க.

2. வணிகக் குறியீடுகளின் பாதுகாப்பிற்காக சமர்ப்பிக்கப்பட்ட பின்வரும் விண்ணப்பங்கள் ஒவ்வொன்றினையும் 2003ம் ஆண்டின் 36ம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தின் வாசககங்களுக்கேற்ப மதிப்பிடுக:

அ. துப்பக்கி ஒன்றினைக் கொண்டதான வெடிக்கும் போர்க்கருவிகளைச் சந்தைப்படுத்துவதற்கான குறியீடொன்று;

ஆ. "Negombo Prawns" எனும் சொற்களைக் கொண்டதும் நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த இறால் பண்ணையாளர்களால் கூட்டான வணிகக் குறியீடாக வழங்கப்பட்டதுமான குறியீடொன்று;

இ. 'Martin's fresh orange juice" எனும் சொற்களைக் கொண்டதும் உண்மையான தோடம்பழங்களை தோடம்பழச் சுவையூட்டியுடன் சீனியும் தண்ணீரும் கலந்து பானம் தயாரிப்பவனுமான மாட்டின் என்பவனால் வழங்கப் பட்டதுமான குறியீடொன்று;

ஈ. "CMW Retreads" எனும் சொற்களைக் கொண்ட மீளமைக்கப்பட்ட டயர்களுக்கான குறியீடொன்று. பிரசித்தி பெற்ற செல்வந்த சந்தைக்கான தொழிற்சின்னமுடைய "CMW" எனும் பெயருடைய மோட்டார் வண்டிகள் இலங்கையில் விற்கப் படுகின்ற போதிலும் அக்குறியீடு பதிவு செய்யப்படவில்லை. "CMW" தொழிற்சின்னம் இலங்கையில் பதிவு செய்யப்பட்டிருந்தால் உமது விடை வேறுபடுமா என்பதை ஆராய்க.

3. புவியியல் குறிகாட்டிகளின் பாதுகாப்பு என்பதற்காகத் தற்போது காணப்படுகின்றதான சட்டத்தினைப் பகுப்பாய்வு செய்வதுடன் நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்காக இவ்வகையான புலமைச்சொத்து வலுப்படுத்தப்படுதலை ஆதரிப்பதற்கு சட்டமுறைமை எவ்விதம் வடிவமைக்கப் படலாமென்பதை ஒப்பீட்டு நியாயதிக்கங்களிலிருந்து பெறப்பட்ட பொருத்தமான உதாரணங்களுடன் மதிப்பிடுக.

4. "நியாயமற்ற போட்டியின் சில வடிவங்களைத் தடுப்பதில் passing-off சம்பந்தமான சட்டமானது கடந்த காலங்களில் முக்கியமான கூறொன்றாக மாறியுள்ளது. எனினும், நியாயமற்ற போட்டி சம்பந்தமான பொதுவான சட்டத்தின் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கு passing-off ஆனது எந்தளவிற்கு விரிவுபடுத்தப் படலாமென்பது பற்றியும் நடைமுறையில் அதனால் முடியுமா என்பது பற்றியும் தொடர்ந்தும் விவாதிக்கப் படுகின்றது".

   மேற்போந்த கூற்றின் பின்னணியில் இலங்கையின் தற்போதய புலமைச் சொத்துச் சட்டத்தின் நிலை பற்றி பொருத்தமான சட்டக் கோட்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டவியலை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க.

5. முதுமானி மருத்துவ ஆராச்சியாளரும் பாம்புக்கடி நிபுணருமான மிக்கி என்பவன் பாம்புக்கடியினால் பாதிக்கப்பட்டவர்களுச் சிகிச்சையளிப்பதற்கு புதிய குணப்படுத்தல் ஒன்றினை அபிவிருத்தி செய்தான். குதிரைகளிலிருந்து எடுக்கப்படுகின்ற அப்போதிருந்த பாம்பு நஞ்சு முறிப்பு (anti-snake venom) வெளிநாடுகளிலிருந்து தற்போது இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றது. வேறு நாடுகளிலுள்ள நச்சுப் பாம்புகளிலிலிருந்து எடுக்கப்படுகின்றவற்றிற்கு எதிராகத் தயாரிக்கப்படும் நஞ்சாகையினால் அதன் திறனிலும் பதுகாப்பிலும் மட்டுப்பாடுகள் காணப்பட்டன. மேலும் இறக்குமதி செய்யப்படுகின்ற நஞ்சு முறிப்புக்கு இருக்கின்ற மாறுபாடான எதிர்விளைவு எப்போதும் பிரச்சனையாகவே காணப் பட்டது. மருத்துவ தொழில்புரிவோர் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளைக் அவதானித்ததன் பேரில் மிக்கி, இலங்கையில் காணப்படுகின்றதான இறப்பை ஏற்படுத்தக் கூடிய நச்சுப்பாம்பு வகைகள் எல்லாவற்றையும் உள்ளடக்கக் கூடியதாக இலங்கைப் பாம்புகளிலிருந்து பெறப்படுகின்ற நஞ்சினை உபயோகித்து நஞ்சு முறிப்பு ஒன்றினைத் தயாரிக்கும் எண்ணத்தை உருவாக்கினான். தனது புதிய

சிகிச்சைக்கான பரீட்சார்த்த மருத்துவம் வெற்றியில் முடிவடைந்ததைத் தொடர்ந்து தனது புதிய நஞ்சு முறிப்பு வர்த்தக ரீதியில் கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டுமென விரும்புவதுடன் சாத்தியமான ஏற்றுமதிச் சந்தையை கண்டிபிடிக்கவும் விரும்புகின்றான்.

நீர் இலங்கையின் காப்புரிமை வழக்கறிஞர் ஒருவரெனவும் மிக்கி உம்மை நாடியுள்ளார் எனவும் அனுமானிக்க. புதிய நஞ்சு முறிப்பு காப்புரிமை செய்யப்படுதல், விசேடமாக அவர் எதிர் நோக்கக்கூடிய சாத்தியமான சட்டச் சவால்கள் ஆகியவற்றை இலங்கையின் புலமைச்சொத்துச் சட்டத்தின் பொருத்தமான வாசகங்களுடன் தொடர்புறுத்தி ஆலோசனை வழங்குக. மேலும் வெளிநாட்டு நியாயாதிக்கங்களில் காப்புரிமையைப் பாதுகாப்பதற்குக் காணப்படுவதான பொருத்தமான பொறிமுறை பற்றியும் ஆலோசனை வழங்குக. பொருத்தமான சட்ட வாசகங்கள் மற்றும் தீர்ப்புச் சட்டத்தினால் உமது விடையை ஆதாரப்படுத்துக.

6. கொழும்பில் முன்னணியிலுள்ள சட்ட நிறுவனமொன்றில் நீர் இளம் புலமைச்சொத்து வழக்கறிஞராகப் பணிபுரிகின்றீரென அனுமானிக்க. இலங்கையில் வர்த்தக ரீதியில் பெறுமதி வாய்ந்த தகவலைப் பாதுகாத்தல் சம்பந்தமாக சட்ட ஆலோசனை பெறும் பொருட்டு மென்பானத் தொழிற்துறையில் முன்னணியிலிருப்பதான சர்வதேசக் கம்பனியொன்று உமது நிறுவனத்தை நாடுகின்றது. இலங்கையில் வியாபார ரகசியங்களைப் பாதுகாத்தலை ஆளுகின்றதான தற்போதுள்ள சட்டநிலையினை விளக்கும் வகையில் குறுகிய அறிக்கையொன்று எழுதுமாறு உமது சிரேஷ்ட சக உத்தியோகத்தர் உம்மை வேண்டுகின்றார்.

பின்வருவனவரும் விடயங்களை குறிப்பாக நோக்கி உமது அறிக்கையைத் தயாரிக்க:

(அ) பாதுகாக்கப்படக் கூடிய தகவல்களின் வகைகள்;

(ஆ) பாதுகாப்பிற்கான தேவைப்பாடுகள்;

(இ) இலங்கையில் தற்போதுள்ள சட்ட வடிவமைப்பு;

(ஈ) வியாபார ரகசியங்களைப் பாதுகாத்தலுடன் சார்ந்த நன்மைகளும் தீமைகளும்.

உமது சட்டவிளக்கமானது பொருத்தமான நியதிச்சட்ட வாசகங்கள், வழக்குச் சட்டவியல் மற்றும் சர்வதேசச் சட்டச் சாசனங்களில் காணப்படுவதான பொருத்தமான சட்டக் கோட்பாடுகள் ஆகியவற்றினால் ஆதாரப் படுத்தப்பட வேண்டும்

7. பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றிற்கு விடையளிக்க:

உலக வர்த்தக சம்மேளனத்தின் Agreement on Trade Related Intellectual Property Rights (TRIPS) இனால் கொண்டுவரப்பட்ட மாற்றங்களை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் கண்ணோட்டத்தில் மதிப்பிடுவதுடன் அந் நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தில் அதன் தாக்கம் பற்றியும் விமர்ச்சித்துக் கருத்துரைக்க. பொருத்தமான எடுத்துக் காட்டுகளை உமது விடைக்கு வலிமை சேர்ப்பதற்குப் பாவிக்க.

**அல்லது**

இலங்கையைச் சேர்ந்த நாகரீக வடிவமைப்பாளரான நிஷா என்பவள் தாய்லாந்து, இந்தியா மற்றும் நேபாளம் உட்பட பல சரித்திர ரீதியானதும் சமய ரீதியானதுமான ஸ்தலங்களுக்கு விஜயம் செய்கிறாள். கண்ணைக் கவருவதாக அவள் எண்ணிய சிலைகள் மற்றும் ஓவியங்கள் சிலவற்றை அவள் வரைந்தாள். இலங்கைக்கு அவள் திரும்பி வந்ததும், அவற்றை, சிகிரியா குகை ஓவியங்கள் பற்றிய அவளது எண்ணத்துடன் சேர்த்து 2018இன் சேகரிப்பான ஆடைகள், கைப்பைகள் மற்றும் சப்பத்துக்களை வடிவமைத்தாள். அவளது சேகரிப்புக்களை தொழில் வடிவமைப்பகளாகப் (industrial design) பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்க விரும்புகிறாள்.

அவளுக்கு ஆலோசனை கூறுக.

# UNIVERSITY OF COLOMBO, SRI LANKA

## FACULTY OF LAW

## BACHELOR OF LAWS DEGREE EXAMINATION - 2018

### Intellectual Property Law

(Three Hours)

Total number of questions: 07

Answer any **FOUR (04)** questions and **no more.**

(Candidates will be penalized for illegible handwriting.)

1. Himali Publication, a publishing company in Sri Lanka, publishes a book titled "Thoughts for inculcating Soft Skills in Students' Life", written by a well- known personality development consultant called Mr. Pinto. The book uses the author's own experiences as well as case studies in explaining the various aspects of soft skills. The preface of the book states that the author is highly inspired by the methods and case studies used by Dr. Thomas, a globally renowned educationist, in his book titled "Soft Skills for Life". Mr. Pinto's book has been recommended as an additional reading book for ordinary level students by the Ministry of Education.

   Another book titled "Soft Skills for a Perfect Life" published by Vethuja Publishers, is also available in the market and commands high sales and a considerable circulation. This book acknowledges the courtesy given by the publishers of "Soft Skills for Life" by allowing them to adopt the book as a Sinhala translation.

   However Himali Publication asserts that the book published by Vethuja Publishers and sold in the market for a very low price is a reproduction of the book published by Himali Publication. It further argues that the book published by Vethuja Publishers contains only minor changes and that even those changes amount to a distortion which would affect the reputation of Mr. Pinto.

   Identify the copyright issues involved in this situation and discuss them with reference to relevant statutory provisions and case law.

2. In terms of the Intellectual Property Act, No. 36 of 2003, evaluate each of the applications given below that are submitted for trademark protection.

   a. A mark consisting of a gun for the marketing of firearms.

b. A mark consisting of the words "Negombo Prawns" by a group of prawn farmers from the Negombo area, as a collective trademark.

c. A mark consisting of the words "Martin's fresh orange juice" by Martin, who makes the juice by mixing fresh oranges with orange flavouring, sugar and water.

d. A mark consisting of the words "CMW Retreads" for re-treaded tyres. A well-known, up-market brand of cars by the name of "CMW" is sold in Sri Lanka, though the mark is not registered. Discuss if your answer would be different if the brand "CMW" was registered in Sri Lanka.

3. Analyse the legal regime currently available for the protection of Geographical Indications, and evaluate, with suitable examples drawn from comparable jurisdictions, how best the legal regime may be structured so as to support the strengthening of this type of intellectual property for the overall development of the country.

4. "Over the years, the law of passing-off has become an important element in preventing some forms of unfair competition. However, there has been continued debate as to how far it might be stretched, and whether passing-off can, practically, compensate for the lack of a general law of unfair competition."

   In light of the above statement, critically discuss the present state of the Sri Lankan IP law, with reference to the relevant legal principles and case law jurisprudence.

5. Miki, a postgraduate medical researcher and snakebite expert, develops a new cure for treating snake bite victims. The existing anti-snake venom, raised from horses, is currently imported to Sri Lanka from abroad. It has limitations in its efficacy and safety as it is manufactured against toxins created by venomous snakes in other countries. Moreover, the adverse reactions to imported anti-venom have always been a problem. Having observed the problem faced by medical practitioners, Miki has conceived the idea of making anti-venom utilizing venom from Sri Lankan snakes, which would cover all the species of deadly venomous snakes found in Sri Lanka. Given the successful completion of the clinical trials of his new therapy, he wishes to make the new anti-venom available on a commercial scale and explore potential export market.

   Assume that you are a patent attorney in Sri Lanka and Miki has approached you. Advise him, with reference to the relevant provisions of the Intellectual Property Act of Sri Lanka, on the patentability of the new anti-venom, highlighting the possible legal challenges that he might face. Also advise him on the most appropriate strategy for securing patent protection in foreign jurisdictions. Support your advice with reference to the relevant legal provisions and case law.

6. Assume that you are a young IP lawyer attached to a leading law firm in Colombo. Your law firm has been approached by a leading international company in the soft drink industry to ascertain a legal opinion regarding the protection of commercially valuable information in Sri Lanka. Your senior associate has requested you to write a short memorandum outlining the current legal regime governing trade secret protection in Sri Lanka.

   Prepare your memorandum with the following aspects in focus:

   (a) Types of information that can be protected;

   (b) Requirements for protection;

   (c) Existing legal framework in Sri Lanka; and

   (d) Pros and cons associated with trade secret protection.

   Your legal exposition should be substantiated with reference to relevant statutory provisions, case law jurisprudence and relevant legal principles embodied in international legal instruments.

7. Answer **any one** of the following:

   **EITHER**

   (a) From the viewpoint of developing nations, evaluate the changes brought about by the World Trade Organisation's Agreement on Trade-Related Intellectual Property Rights (TRIPs Agreement), and critically comment on their impact on the development agenda of these nations. Use suitable examples to support your arguments.

   **OR**

   (b) Nisha, a fashion designer from Sri Lanka, visited historical and religious sites in several countries including Thailand, India and Nepal. There she sketched some of the paintings and statues that she thought were eye-catching. Upon her return to Sri Lanka, she combined these with her own impressions of the Sigiriya rock paintings and designed her 2018 summer collection of clothes, handbags and shoes. She wishes to apply for registering industrial designs for her collection. Advise her.

**********